Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 29    11 06 1992)    வியாழக்கிழமை    ஓசை 114

## சூழலை மாசுபடுத்தும் பொருள்கள்மீது வரி

உலகம் பூராகவும் சூழல்வரி அறவிடுவதற்குச் சர்வதேச மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை வனமிருகங்கள் பரிபாலன ஆணையாளர் கலாநிதி சரத் கொட்டகம தெரிவித்தார். கண்டியில் சூழல் பட்டறை ஒன்றில் பேசும்போது அவர் மேலும் கூறியதாவது: சூழலை மாசுபடுத்தும் அனைத்து உற்பத்திப் பொருள்கள் மீதும் ஜூலை 5 ஆம் திகதியின்பின் வரி விதிக்கப்படும். இதனால் பெற்றோலியப் பொருள்களினதும் பெற்றோல் உப - உற்பத்திப் பொருள்களினதும் விலை அதிகரிக்கும். மேலும் பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் உறைகள் போன்றவற்றின் விலைகளிலும் அதிகரிப்பு [4 ஆம் பக்கம் பார்க்க]

◎ தெல்லிப்பழை ◎ சண்டிலிப்பாய் ◎ மாகியப்பிட்டி ◎ கல்வளை

# குடிமனைகள் மீது கோரமான குண்டுவீச்சு

# ஏழு பேர் உடல் சிதறி பலி: பலர் படுகாயம்

— நமது அலுவலக நிருபர்கள் சசி, கணேஸ் —

வலிகாமத்தின் பல பகுதிகளிலும் நேற்று மாலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் கோரமான குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. குடியிருப்புக்கள் மீது கண்மூடித்தனமாக மேற் கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் குழந்தைகள் உட்பட ஏழு பொதுமக்கள் கோரமாகக் கொலையுண்டனர். பதினொரு பேர் படுகாயம் அடைந்தனர். பல வீடுகள் சேதமாகின.

வலிகாமம் பகுதியில் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி, கல்வளை, பொன்னாலை, தெல்லிப்பழை ஆகியபகுதிகளிலேயே இத்தாக்குதல்கள் இடம்பெற்றன. நேற்று மாலை 3 30 மணிக்கும் 5 மணிக்குமிடையில் இம்மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடந்தன. சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான நான்கு குண்டு வீச்சு விமானங்களும், ஒரு உலங்குவானூர்தியும் இத்தாக்குதலை நடத்தின.

இத் தாக்குதலின்போது, தெல்லிப்பழையில் நான்கு குண்டுகளும், சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி ஆகியவற்றில் தலா இரண்டு குண்டுகளும் பொன்னாலை, கல்வளை ஆகியவற்றில் தலா ஒவ்வொரு குண்டும் வீசப்பட்டன.

இத்தாக்குதலில் குழந்தை (4ஆம் பக்கம் பார்க்க)

## குடாக்கடல் பகுதியில் மீனவர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணக் குடாக்கடலில் கடந்த இரண்டு தினங்களாக மீனவர்கள்மீது கடற்படையினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

மண்டை தீவுக் கரையில் இருக்கும் கண்ணாக்காடுகளின் மறைவிலிருந்து கரையோரப் பகுதி பொதுமக்களின் வாழிடங்களை நோக்கியும், மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களை நோக்கியும், சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுவருகின்றன

இதேவேளை இக்கடற்பரப்பில பீரங்கிப்படகுகளின் நடமாட்டமும் காணப்படுவதாக தெரியவருகின்றது.

## மட்டு - அம்பாறையில் தமிழ்க்குழுக்கள் அட்டகாசம்

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மீது தமிழ்க் குழுக்கள் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் மூலம் தெரியவருகின்றது. தமிழ் மக்களிடமிருந்து பெருந்தொகையில் பணத்தை வசூலிப்பதில் இச் சக்திகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன கடந்த இரு மாதங்களில் மட்டும் மூப்பத்திரண்டு தமிழர்களைக் கைது செய்த இச் சக்திகள் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா இருபத்தையாயிரம் வீதம் அறவாக்கிக் கொண்டுள்ளன.

சிங்கள இராணுவத்தாலும், முஸ்லிம் காடையர்களாலும் அல்லலுற்று வரும் இப்பகுதி மக்கள் இக்குழுக்களின் செயலால் மேலும் வெறுப்புற்று உள்ளனர் எனத்தெரிய வருகிறது.

## மூதூர் பகுதியில் தேடுதல்;

## தெல்லிப்பழையில் ஒரே குடும்பத்தில் நால்வர் உடல் சிதறிப்பலி

தெல்லிப்பழைப் பகுதியை வட்டமிட்ட சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் துர்க்கை அம்மன் ஆலய தெற்குப் பகுதியில் அமைந்திருந்த வீடு ஒன்றின் மீது வீசிய நான்கு குண்டுகள் வீழ்ந்து வெடித்ததினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உடல் சிதறி

### இடிபாடுகளுக்கு இடையில் சடலங்கள்

வெடித்தன இதனால் வீட்டுக்குள் இருந்த மகாலிங்கம் (வயது 65) இவரது மனைவி சிவபாக்கியம் (வயது 67) இவர்களது மகள் ம. மதனகலா (வயது20) மருமகன் எஸ். சுபாசுந்தரம் (வயது 45) ஆகியோர்

மக்களால் மீட்டெடுக்கப்பட்டன,


இவற்றில் மதனகலாவின் தலை சிதறி மூளை வெளியேறியதுடன் இடது கை துண்டிக்கப்பட்டுக் கிடந்தது. தாயாரின் இடுப்புக்குக் கீழ்ப்

## மீண்டும் யாழ். வர பிக்குகள் விருப்பம்

(யாழ்ப்பாணம்)

சமாதான முறைகள் மூலம் வடக்கிலுள்ள மக்களின் தணியாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளில் நாம் ஈடுபட்டுள்ள இத்தேவேளை மீண்டும் ஒரு முறை யாழ்ப்பாணம் வர எண்ணியுள்ளோம் என யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ள தென்னிலங்கை சமாதானத் தூதுக்குழுவினர் யாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அக்கடிதத்தில் 1992 ஏப்பிரல் 22-27 திகதி வரை ... யாழ்ப்பா (4ஆம் பக்கம் பார்க்க)



இருக்கும் கண்ணாக்காடுகளின் மறைவிலிருந்து கரையோரப் பகுதி பொதுமக்களின் வாழி

பிடி பீரங்கிப்படகுகளின் நடமாட்டமும் காணப்படுவதாக தெரியவருகின்றது.

வனை, பொன்னாலை, தெல்லிப்பழை ஆகியபகுதிகளிலேயே இத்தாக்குதல்கள் இடம்பெற்றன. நேற்று மாலை 3 30 மணிக்கும் 5 மணிக்குமிடையில் இம்மிலேச்சத்தனமான

சொந்தமான நான்கு குண்டு வீச்சு விமானங்களும், ஒரு உலங்குவானூர்தியும் இத்தாக்குதலை நடத்தின

இத்தாக்குதலின்போது, தெல்லிப்பழையில் நான்கு

பொன்னாலை, கல்வளை ஆகியவற்றில் தலா ஒவ்வொரு குண்டும் வீசப்பட்டன.

இத்தாக்குதலில் குழந்தை

(4ஆம் பக்கம் பார்க்க)

ஈடுபட்டுள்ள அதேவேளை மீண்டும் ஒரு முறை யாழ்ப்பாணம் வர எண்ணியுள்ளோம் என யாழ்ப்பாணம் வந்து

மேலும் அவ் அடித்தந்த 1992 ஏப்ரல் 22-27 தகதி வரை ... யாழ் ... பா

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு - அம்பாறையில் தமிழ்க்குழுக்கள் அட்டகாசம்

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மீது தமிழ்க் குழுக்கள் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் மூலம் தெரியவருகின்றது. தமிழ் மக்களிடமிருந்து பெருந்தொகையில் பணத்தை வசூலிப்பதில் இச் சக்திகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன கடந்த இரு மாதங்களில் மட்டும் முப்பத்திரண்டு தமிழர்களைக் கைது செய்த இச் சக்திகள் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா இருபத்தையாயிரம் வீதம் அறவாக்கிக் கொண்டுள்ளன.

சிங்கள இராணுவத்தாலும், முஸ்லிம் காடையர்களாலும் அல்லலுற்று வரும் இப்பகுதி மக்கள் இக்குழுக்களின் செயலால் மேலும் வெறுப்புற்று உள்ளனர் எனத்தெரிய வருகிறது.

## மூதூர் பகுதியில் தேடுதல்; ஐவர் இராணுவத்தால் கைது

[மூதூர்]

மூதூர், கட்டைபறிச்சான், இளக்கந்தை பச்சைநூல் பகுதிகளை சுற்றிவளைத்து தீவிர தேடுதல் நடத்திய சிறிலங்கா இராணுவத்தினர் பத்துத் தமிழர்களைக் கைது செய்து தாக்கியதுடன் அவர்களில் ஐந்து பேரை தமது முகாமிற்கும் கொண்டு சென்றுள்ளனர்.

# தெல்லிப்பழையில் ஒரே குடும்பத்தில் நால்வர் உடல் சிதறிப்பலி

## இடிபாடுகளுக்கு இடையில் சடலங்கள்

தெல்லிப்பழைப் பகுதியை வட்டமிட்ட சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் துர்க்கை அம்மன் ஆலய தெற்குப் பகுதியில் அமைந்திருந்த வீடொன்றின் மீது வீசிய நான்கு குண்டுகள் வீழ்ந்து வெடித்ததினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உடல் சிதறிப் பலியானார்கள்

நேற்று மாலை ஐந்து மணியளவில் அப்பகுதிக்கு வந்த இரண்டு குண்டுவீச்சுவிமானங்களும் வீசிய குண்டுகள் வீட்டினுள்ளும் முற்றத்திலும் பனந்தோப்பிற்குள்ளும் வீழ்ந்து வெடித்தன இதனால் வீட்டிற்குள் இருந்த மகாலிங்கம் (வயது 65) இவரது மனைவி சிவபாக்கியம் (வயது 67) இவரது மகள் ம. மதனகலா (வயது20) மருமகன் எஸ். சுபாசுந்தரம் (வயது 45) ஆகியோர் ஸ்தலத்திலேயே உடல் சிதறிப் பலியானார்கள். பலத்த இடிபாடுகளுக்கு மத்தியிலிருந்து சடலங்கள் அனைத்தும்பொது மக்களால் மீட்டெடுக்கப்பட்டன,

இவற்றில் மதனகலாவின் தலை சிதறி மூளை வெளியேறியதுடன் இடதுகை துண்டிக்கப்பட்டுக் கிடந்தது. தாயாரின் இடுப்புக்குக் கீழ்ப் பகுதி முழுவதும் சிதறிக் காணப்பட்டது. தந்தையின் உடல் பல கூறுகளாகப் பிழந்து காணப்பட்டது மதிலுக்கு அருகில் பதுங்கியிருந்த மருமகனின்

(4ஆம் பக்கம் பார்க்க)



மன்னாரில் நேற்று முன்தினம் நடந்த மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

## மன்னாரில் வீரச்சாவு



மேஜர் கந்தன்



லெப். அரவிந்தன்

மன்னார் மாவட்டம் சிறுநாவற் குளப்பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் காயமடைந்த மேஜர் கந்தன் வீரச்சாவு எய்தினார் இத்தாக்குதலில் மேலும் மூன்று போராளிகள் வீரச்சாவு அடைந்தது தெரிந்ததே; இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டும்; பலர் காய

(4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் லெப். கேணல் உட்பட மூன்று அதிகாரிகள் பலி

(கொழும்பு)

புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மூன்று சிறிலங்கா பாதுகாப்புபடை அதிகாரிகள் கொல்லப்பட்டதாக நேற்றிரவு ரூபவாகினி தெரிவித்தது. இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றதாக மேலும் அச்செய்திகள் தெரிவித்தன.

பூநகரி இராணுவ முகாம் பகுதியிலேயே இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது இத் தாக்குதலில் உயிரிழந்த மூவரில் ஒரு லெப் கேணலும் ஒரு லெப்டினன்ட்டும், ஒரு கடற்படை அதிகாரியும் அடங்குவதாகவும் ரூபவாகினி மேலும் தெரிவித்தது.

இக் கண்ணிவெடித் தாக்குதல் குறித்து மேலதிக செய்தி எதையும் ரூபவாகினி வெளியிடவில்லை

## சண்டிலிப்பாயில் குடும்பப் பெண்மணி துடிதுடித்து மரணம்

### ஆறு பேர் படுகாயம்

சண்டிலிப்பாய் பகுதியை வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது வீசிய இரண்டு குண்டுகளினால் குடும்பப் பெண் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் அறுவர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 3 30 மணியளவில் வீசிய இரண்டு குண்டுகள் ஐயாத்துரை என்பவரின் வீட்டின் மீது வீழ்ந்து வெடித்தன இதில் ஐ செல்வராணி (வயது 46) ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். ஐ புஸ்பராணி (வயது 30 பிறேமரஞ்சினி (வயது 22) றம்மியா (வயது 05), செல்வி நந்தசாமி (வயது 08), தர்சினி (வயது

(4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப் பகுதியிலும் நேற்று அகோரக் குண்டுவீச்சு

(பூநகரி)

பூநகரிப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் பாரிய குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்று மாலை 4 00 மணியளவில் மேற்படி பகுதிக்கு விரைந்து வந்த மூன்று குண்டு வீச்சு விமானங்கள் பல தடவை வட்டமிட்டன. சிறிது நேரத்தில் மூன்று விமானங்களும் மாறி மாறி பல தடவைகள் குண்டுகளை வீசித்தள்ளின.

இக்குண்டுத் தாக்குதல் சுமார் முப்பது நிமிடங்கள் வரை நீடித்தது. இத்தாக்குதலினால் இப்பகுதியில் இருந்த பொதுமக்களின் குடியிருப்புகள் பலத்த சேதமடைந்துள்ளன. அத்துடன் பொதுமக்கள் சிலரும் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன

## மாகியப்பிட்டியில் இருவர் பலி; 5 பேர் காயம்

(மாகியப்பிட்டி)

மாகியப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் உள்ள பொது மக்களின் குடியிருப்புக்கள்மீது நடாத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளதுடன் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

சி சுதன் (வயது 13) சத்திய வடிவேலு அருளனந்தேஸ்வரி (வயது 28) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தடுப்புக்காவலில் 5865 பேர் உள்ளனர்

தடுப்புக்காவலில் தற்போது 5865 பேர் வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் செயலணிக் குழு தெரிவித்துள்ளது

மனித உரிமைகள் செயலணிக் குழுவின் முன்னேற்றம் பற்றித் தெரிவித்து வெளியிடப் பட்டிருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுளளது.

காடு அழியின்
நாடு அழியும்

## ஆலயம், பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்தவேண்டாம்

### திருமுறைமன்றம் வேண்டுகோள்

இனிமேலும் ஆலயங்கள், வித்தியாலயங்கள், மடாலயங்கள், அகதிமுகாம்கள், மக்கள் செறிந்துவாழும் பகுதிகள் என்பவற்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் கண்மூடித்தனமாக நடத்தும் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும்படி அகில இலங்கை திருமுறை மன்றம் விடுத்த அறிக்கையொன்றில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவைக் கோரியுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் மக்கள் மனப்பதைப்புடன் தஞ்சமெனச் சென்றடையும் இத்தகைய நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவது மிகவும் பாபகரமான செயல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமை மீறல் குறித்து ஆராய ஐரோப்பிய பாராளுமன்றகுழு விரைவில் கொழும்பு வருகிறது

(கொழும்பு)

மனித உரிமைகள் மீறல் குறித்து ஆராய ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உறுப்பினர் இருவர் அடங்கிய தூதுக்குழு ஒன்று சிறிலங்கா வரவுள்ளது. அண்மையில் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்ட சிரேஷ்ட அமைச்சர் ஒருவரிடம் இத் தூதுக்குழுவின் விஜயம் குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டதாக ஐரோப்பிய பாராளுமன்றம் இயங்கும் புருசல்ஸ் செய்திவிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இத்தூதுக் குழு இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத ஆரம்பத்தில் கொழும்பு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஐரோப்பிய பாராளுமன்றத் தூதுக்குழுவின் இரண்டாவது சிறிலங்கா விஜயமாகும்.

கடந்த ஒக்டோபர். நாம் பர் மாதங்களில் பிரித்தானிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# தோட்டக் காணி பகிர்வுகளில் தொழிலாளர் புறக்கணிப்பு

(கண்டி)

தோட்டங்களில் இடம் பெறும் காணிப்பகிர்வின் போது தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனக் கூறப்பட்ட போதும் அண்மையில் பண்டாரவளை வியாங்கவெல தோட்டத்தில் சுமார் இருபது ஏக்கர் காணி வெளியாருக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் காணிப்பகிர்வை உடனடியாக தடுத்து நிறுத்த ஆவன செய்யுமாறு கோரி மேற்படி தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஜனாதிபதிக்கு இக்காணிப் பகிர்வு தொடர்பான மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி தோட்டக்காணி கடந்த வெள்ளிக்கிழமை அரச அதிகாரிகளினால் வெளியாருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன இக்காணிப்பகிர்வில் தோட்டத்தொழிலாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை எனவும் தொழில் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விடயம் தொடர்பாக தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். கிருஷ்ணசாமி குறிப்பிடுகையில்

தோட்டங்களில் இடம் பெறும் காணிப்பகிர்வில் தொழிலாளருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட போதும் நடைமுறையில் இதற்குமாறாகவே சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இதனால் வீணான பிரச்சினைகள் ஏற்படுவதுடன் பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ்கின்ற தோட்ட கிராம மக்களிடையேயும் பிரச்சினை ஏற்பட வழிவகுக்கின்றது எனவே அதிகாரிகள் பாரபட்சமின்றி கருமமாற்ற வேண்டும் பண்டாரவளை வியாங்கவெல காணிப் பகிர்வும் ஒரு ஆரோக்கியமான சூழ் நிலையை உருவாக்குவதாக அமையவில்லை எனவும் தெரிவித்தார்.

மேற்படி மகஜரின் பிரதிகள் ஊவா மாகாண முதலமைச்சர் காணியமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## தோட்டத்துறை வீழ்ச்சிக்கு ஆட்சியாளரே காரணம்

-காமினி

(மாத்தளை)

இன்றைய ஆட்சியாளரின் தவறே தோட்டத்துறை பாழடைந்தமைக்குரிய காரணம் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான காமினி திசாநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரத்கமவில் அண்மையில் நடந்த கட்சியின் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் பேசுகையில் பெரும் நன்மைகளும் இலாபமும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு அன்று தேசிய மயமாக்கப்பட்ட தோட்டங்கள் இன்று நாசமடைந்துள்ளன என கவலை தெரிவித்தார்.

அவர் தமதுரையில் தொடர்ந்து கூறியதாவது:

சிறு தோட்ட உரிமையாளர்களை உயர்த்தும் வேலைத்திட்டங்கள் தற்போது அமுங்கிவிட்டது தோட்டங்களை இன்றைய அரசு தனியாரிடம் ஒப்படைக்கப் போகிறார்கள் இதனால் தோட்டத் தொழிலாளர்கள் கவலை அடைந்துள்ளனர். அத்துடன் அரச வங்கிகளையும் தனியார்துறையினருக்கு வழங்க அரசாங்கம் ஆயத்தமாகி வருகிறது எனவும் குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

**சங்கீதம்**

சங்கீதம்வினாவிடை கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், தினேஷ்,பாலாஜி,மண்டேலா, மாக்மிலன், ஞானசுரபி, ஆல் சிலோன், சேரபிதா, அறிவாலயம், பிரசாந்தி, வாலாம்பிகா, ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், ஸ்ரீகாந்தி, ஸ்ரீகாந்தா, நடுவுத்துருத்தி. (2648)

## ஈரான் விருப்பம்

(கொழும்பு)

இலங்கையில் வர்த்தக வங்கிகள் திறக்க கப்பல் திருத்தும் நிலையம் அமைக்க ஈரான் விருப்பம் தெரிவித்துள்ளது.

அத்துடன் விமான சேவை உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வதற்கும் வர்த்தக துறைகளில் முதலீடு செய்வதற்கும் ஈரான் விருப்பம் தெரிவித்துள்ளது.

UNIVERSITY OF JAFFNA

**TENDER NOTICE**

*Tenders are invited for the following from contractors registered for building works with University of Jaffna or ICTAD.*

1. Repairs to hostel at Jaffna town-Stage -I
2. Temporary rest room near health centre.

*Tender forms can be obtained from Works Engineer. University of Jaffna from 17 - 06 - 92 - 19 - 06 - 92 during working hours on producing a receipt from Bursar, University of Jaffna for the following for each tender.*

*Non - refundable deposit - Rs 200/-*

Refundable deposit Rs.2000/-

*Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 2-7-92 at 10 00 a. m.*

*Tender board, Univer-*

## பாலர் பாடசாலை அமைப்பு

[புங்குடுதீவு]

அரியாலை கணேசன் தோட்டம், 'சாம்சன்' குடியிருப்பில் வசிக்கும் தீவக மக்களுக்கென நூலகம், பாலர் பாடசாலை, பூங்கா என்பன அமைக்கப் பட்டுவருகின்றன. இவற்றில் பாலர் பாடசாலையின் அமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. நூலகம், பூங்கா என்பவற்றின் அமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அமைப்பு வேலைகள் பூர்த்தியானவுடன் விரைவில் இவை மக்களின் பாவனைக்கென திறந்துவிடப்படும். மேற்படி குடியிருப்பில் இருநூற்றிநாற்பது குடும்பங்களை சேர்ந்த மக்கள் வசித்து வருவது குறிப்பிடத்தக்கது. [22]

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புவிக்கோள உச்சி மாநாட்டு நிகழ்வையொட்டி சூழல் மாசடைதல், பேணுதல் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கை யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

கிளிநொச்சி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச்சங்கம்

**பதவி வெற்றிடம்**

**கணக்காளர் தரம் 3**

**தகைமைகள் :**

1. சிரேஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியலில் பெற்றுள்ள டிப்ளோமா, அல்லது
2- கூட்டுறவு சேவையாளர் உயர்தரப் பத்திரத்துடன் அத்தகைய நிறுவனத்தில்பெற்றுள்ள ஒரு வருட அனுபவம் அல்லது,
3. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் சாதாரணதராதரப் பத்திரமும் அத்தகைய நிறுவனத்தில் பெற்றுள்ள 3 வருடகால அனுபவமும் அல்லது,
4- 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர்

**சம்பள அளவுத் திட்டம் ;**

1165 — 60 தர 3 — 75 தர 11 — 2170
(மற்றும் கூ. வே. ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் சகலபடிகளும் உட்பட)

வயதெல்லை : 25 — 40 வரை

விண்ணப்ப முடிவுத் திகதி: 30 - 06 - 1992

### இடம்பெயர்ந்தோர் முகாமில்

## பாலர் பாடசாலையும் சனசமூக நிலையமும்

(பண்டத்தரிப்பு)

மாதகல் காடாப்புலம் இடம் பெயர்ந்தோர் முகாமில் பாலர் பாடசாலையும் சனசமூக நிலையமும் திறந்து வைக்கப் பட்டது.

மேற்படி பாலர் பாடசாலையை கடற்புலிகளின் வலி வடக்கு இடம்பெயர்ந்தோருக்கான பொறுப்பாளர் திரு மதன் குத்துவிளக்கேற்றி கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்தார். இதன் சனசமூக நிலையத்திளை கடற்புலிகளின் மகளிர்படைப் பொறுப்பாளர் தேன்மொழி திறந்து வைத்தார்.

இந் நிகழ்வைத் தொடர்ந்து பாடசாலை மைதானத்தில் முகாம் தலைவர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவரது தலைமையுரையைத் தொடர்ந்து திரு. மதன் செல்வி தேன்மொழி மற்றும் சுகாதாரப் பரிசோதகர், சுகாதாரப் பகுதி மருந்துக்கலவையாளர் திரு. கந்தசாமி புலவர் முகாம் செயலாளர் திருமதி நாகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ச(

## தெல்லிப்பழை தபாலகம் இடம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த தெல்லிப்பழை, காங்கேசன்துறை ஆகிய அஞ்சல் அலுவலகங்கள் நேற்று முதல் சுன்னாகம் பட்டினம் பகுதியில் இயங்குகின்றன.

தெல்லிப்பழை அஞ்சலகம் சுன்னாகம் கந்தரோடை வீதியில் நடராசா வைத்தியசாலைக்கு அண்மையிலும், காங்கேசன்துறை அஞ்சலகம் சுன்னாகம் மின்சாரசபைச் சந்திக் கருகிலுள்ள தனியார் இல்லத்திலும் இயங்கும்.

அவ்வூர் பொதுமக்கள் தமக்குரிய கடிதங்களை அங்கு பெற்றுக் கொள்ள ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

## பண்ணிசைப் போட்டியில் இரண்டாம் இடம்

கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவியான செல்வி சுகந்தினி இராஜசேகரம், இணுவில் திருநெறிய தமிழ் மறைக் கழகத்தின் பண்ணிசைப்போட்டியில்மேற்பிரிவில் இரண்டாம் பரிசைப் பெற்றுள்ளார்.

## பயிலுநர் ஆசிரியர் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆரம்பப் பயிலுநர் ஆசிரியத் தெரிவுக்கான பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதி நடை[illegible] பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பரீட்சை இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ([illegible])

## நினைவு கூருகின்றோம் . . .

**1992-06-11**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை புகையிரத நிலையத்தில் வைத்து சிறிலங்கா ஊர்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமற் போன 4 தமிழர்கள்.

மட்டக்களப்பு - கிரான்குளம் முகாமில் வைத்து இந்திய இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட குருமண் வெளியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

1989 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**சுப்பையா நிக்கலஸ்**

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட வவுனியா உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கும்புறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். மார்ஷல்** (மார்க்கண்டு நமசிவாயம் - கிண்ணியடி, மட்டக்களப்பு.)

**2-ம் லெப். சதீபன்** (பாக்கியராஜா - விளாவெட்டுவான், மட்டக்களப்பு.)

**சகுந்தர்** (சுப்பிரமணியம் பஞ்சலிங்கம் - கோரக்கல்லிமடு, மட்டக்களப்பு )

**கரி / கிரி** (பூபாலபிள்ளை செல்வராஜா - மன்னம்பிட்டி, மட்டக்களப்பு.)

**பரசு** (செல்வராசா - சந்திவெளி, மட்டக்களப்பு.)

near health centre.

*Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 17-06-92 - 19-06-92 during working hours on producing a receipt from Bursar, University of Jaffna for the following for each tender.*

*Non-refundable deposit - Rs 200/-*

*Refundable deposit Rs. 2000/-*

*Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 2-7-92 at 10 00 a. m.*

*Tender board, University of Jaffna reserves the right to reject any tender.*

*Registrar*
*University of Jaffna*
*Thirunelvely,*
*Jaffna.* (சி/4532)

---

...பெற்றுள்ள டிப்ளோமா, அல்லது

2- கூட்டுறவு சேவையாளர் உயர்தரப் பத்திரத்துடன் அத்தகைய நிறுவனத்தில்பெற்றுள்ள ஒரு வருட அனுபவம் அல்லது,

3. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் சாதாரணதராதரப் பத்திரமும் அத்தகைய நிறுவனத்தில் பெற்றுள்ள 3 வருடகால அனுபவமும் அல்லது,

4- 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாட் கூட்டுறவுப் பரிசோதகர்

சம்பள அளவுத் திட்டம் ;

*1165 — 60 தர 3 — 75 தர 11 — 2170*
(மற்றும் கூ. வே. ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் வழங்கப்படும் சகலபடிகளும் உட்பட)

வயதெல்லை : 25 — 40 வரை

விண்ணப்ப முடிவுத் திகதி: *30 - 06 - 1992*

விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர், தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபால்மூலமோ அல்லது நேரிலோ அனுப்பப்படல்வேண்டும்

பொதுமுகாமையாளர்
தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்
கிளிநொச்சி. (2655) திகதி : 6-6-92

---

# பாலர் பாடசாலையும் சனசமூக நிலையமும்

(பண்டத்தரிப்பு)

மாதகல் காடாப்புலம் இடம்பெயர்ந்தோர் முகாமில் பாலர் பாடசாலையும் சனசமூக நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி பாலர் பாடசாலையை கடற்புலிகளின் வலிவடக்கு இடம்பெயர்ந்தோருக்கான பொறுப்பாளர் திரு மதன் குத்துவிளக்கேற்றி கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்தார். இதன் சனசமூக நிலையத்தினை கடற்புலிகளின் மகளிர்படைப் பொறுப்பாளர் தேன்மொழி திறந்து வைத்தார்.

இந் நிகழ்வைத் தொடர்ந்து பாடசாலை மைதானத்தில் முகாம் தலைவர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவரது தலைமையுரையைத் தொடர்ந்து திரு. மதன் செல்வி தேன்மொழி மற்றும் சுகாதாரப் பரிசோதகர், சுகாதாரப் பகுதி மருந்துக்கலவையாளர் திரு. கந்தசாமி புலவர் முகாம் செயலாளர் திருமதி நாகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (ச(

---

யாழ். மாநகரசபை

# பொது அறிவித்தல்

## உயர்தொழில்கள் மீதான வியாபார வரி - 1992

கீழ்க்காட்டப்படும் உயர்தொழில்கள் சம்பந்தமாக 31-12-91இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுகைகள் பற்றிய விபரத்திரட்டுக்கள் 30-06-92க்கு முன் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பதனை மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 247 (சி)ன் கீழ் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் ஒவ்வொரு நிறுவன உரிமையாளர்களும் தமது பெறுகைகள் பற்றிய காசுப் பற்றுச்சீட்டுப் பிரதிகள், காசேடு ஆகியவற்றை, இவற்றைப் பரிசோதனை செய்யவரும் எமது வருமானப் பரிசோதகர்களிடம் காண்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பதிவேடுகள், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் உச்சவரி விதிக்கவேண்டியேற்படும் என்பதனைக் குறிப்பிடுவதுடன் இவ்விடயங்களில் நிறுவன உரிமையாளர்களை எம்முடன் ஒத்துழைக்குப்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

1) முதல் வழங்குனர்
2) கடன் வழங்குனர்
3) தனியார் கல்வி நிலையங்கள்
4) ஒப்பந்தகாரர்
5) தரகுமுகவர்
6) வைத்திய ஆலோசனைச்சேவை
7) தனியார் மருந்தகம்
8) தனியார் வைத்தியசாலை
9) ஆயுர்வேத வைத்தியசாலை
10) நில அளவையாளர் (உத்தரவு பெற்ற)
11) லொறி போக்குவரத்து
12) வரி ஆலோசகர்
13) விளம்பர முகவர்
14) தொழில் முகவர்
15) தனியார் பாதுகாப்புச் சேவை
16) பல் வைத்தியர்
17) கணக்காய்வாளர்
18) கணக்காளர்
19) பிரயாணமுகவர்
20) கட்டட பொறியியலாளர்
21) வரைபடவியலாளர் (கட்டடக்கலை)

09-06-92 மாநகரசபை ஆணையாளர்
(சி/4535) யாழ். மாநகரசபை

---

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட வவுனியா உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கும்புறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். மார்ஷல்** (மார்க்கண்டு நமசிவாயம் - கிண்ணியடி, மட்டக்களப்பு.)

**2-ம் லெப். சதீபன்** (பாக்கியராஜா - விளாவெட்டுவான், மட்டக்களப்பு.)

**சகுந்தர்** (சுப்பிரமணியம் பஞ்சலிங்கம் - கோரக்கல்லிமடு, மட்டக்களப்பு )

**கரி / கிரி** (பூபாலபிள்ளை செல்வராஜா - மன்னம்பிட்டி, மட்டக்களப்பு.)

**பரசு** (செல்வராசா - சந்திவெளி, மட்டக்களப்பு.)

**செந்தில்** (கிண்ணியடி. மட்டக்களப்பு.)

மட்டு: கலுவாஞ்சிக்குடியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**சபேசன்** (சாமித்தம்பி துரைரத்தினம்-தம்பலவத்தை மண்டூர், மட்டக்களப்பு.)

**கபூர்** (முகமது அலியார் முகமது சலீம் - காங்கேயன் ஓடை, மட்டக்களப்பு.)

**நவயுகன்** (தம்பாப்பிள்ளை திருச்செல்வம் - கொக்கட்டிச் சோலை, மட்டக்களப்பு.)

**விமலநாதன்** (பாக்கியராஜா ரவி - மகிழவெட்டுவான், மட்டக்களப்பு.)

**கீரோ** (கொத்தியாபுலவு, மட்டக்களப்பு.)

**வசந்தராஜ்** (கோயில்போரதீவு, மட்டக்களப்பு.)

மட்டக்களப்பு கல்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**தாகிர்** (முகைதீன் பாவா அன்சார் - திருக்கோணமடு, மட்டக்களப்பு.)

கலவர நேரத்தின்போது திருக்கோணமலை சென்று காணாமல் போன மட்டக்களப்பு வாழைச்சேனை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - அரியகுண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். சூரி** (காளிமுத்து காமராஜா - வற்றாப்பளை முள்ளியவளை, முல்லைத்தீவு.)

**ரசீத்** (சண்முகராசா பன்னீர்ச்செல்வம் - விசுவமடு, முல்லைத்தீவு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4531)

---


எந்த வகை **பத்திரிகைத் தாளிலும் மட்டை(*BOARD*)களிலும்**

மனம் நிறைந்த
தரம் குன்றாத

அச்சு வேலைகளுக்கு

தமிழ், ஆங்கிலம்
ஆகிய மொழிகளில்
துண்டுப் பிரசுரங்கள்
தொடக்கம்
பாரிய புத்தகங்கள்
வரை
பொறுப்பேற்கப்படும்

# ஈழநாதம்

( அச்சக வர்த்தகப் பகுதி )

மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்

[illegible] யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

சுதந்திரத்தில் பற்றுக்கொண்டவர்கள்
சுதந்திரம் அடைவார்கள் என்பது உறுதி

— எட்மண்ட்பர்க்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 11-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 65

## தொடர்ந்து ஏமாற தயாராக இல்லை

"சிறுபான்மை இன மக்களை ஒதுக்கிவிட முடியாது இனவாதம் பேசுவதை கட்சி முழுமையாகக் கைவிட வேண்டும். ஏனெனில் தேர்தல்களின் வெற்றியை நிர்ணயிப்பதில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள் அவர்களின் பிரச்சினையைத் கட்டிக்கழிக்க முடியாது" இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநயக்கா கண்டியில் நடந்த கருத்தரங்கொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை இனங்கள் குறித்து திரு. அனுரா பண்டாரநாயக்காவின் இக் கருத்தானது தனியாக அவருடையதோ அன்றிச் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினுடையதோ மட்டும் அல்ல, சிங்கள அரசியற்கட்சிகள் குறிப்பாக பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றின் பொதுக் கருத்து என்றே கூறவேண்டும்.

சிங்களக் கட்சிகள் எப்பொழுதும், தமிழ் மக்களின் வாக்குகளை அல்லது தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் வாக்குகளைப் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனவே ஒழிய ஒருபொழுதும் தமிழ் மக்களை இலங்கையின் பிரஜைகள், அவர்களுக்கும் இலங்கைத்தீவில் சிங்களவர்களுக்கு இருப்பது போன்று சம உரிமைகள் உண்டு என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு தமிழனின் உதவி தேவைப்படாத காலகட்டத்தில், தமிழருக்கெதிரான நடவடிக்கைகளை மேற் கொள்வதிலேயே அக்கறையாக இருந்தனர். இதில் கட்சி வேறுபாடு இன்றியும் செயற்பட்டனர்.

மலையகத் தமிழ் மக்களின்பால் சிங்கள அரசியற் கட்சிகளை சார்ந்து நிற்கச் செய்து விடும் என்பதற்காக 1949 இல் அவர்களின் வாக்குரிமையை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் பறித்தனர். இதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பலம் வெகுவாகக் குறைக்கப்பட்டது.

பின்னர் 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்துடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தது. இதனால் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றக் கூடிய பலத்துடன் இக்கட்சி இருந்தது. இந்நிலையில் முதல் வேலையாக 1972 இல் அரசியல்

# தமிழர்களை அடிமைப்படுத்தவே கொழும்பு முனைப்புடன் செயற்படுகிறது

தமிழர்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க இயலாமல் தென்னிலங்கை அரசும், அரசியல் வாதிகளும் தடுமாறுவதை அண்மைய சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்தப பிரச்சினைக்கு என்ன தீர்வை முன்வைப்பது என்பதில் தொடங்கி எப்படிப்பயனுள்ள வகையில் அமுலாக்குவது என்பது ஈறாக அதாவது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைமையில் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டத்தை எவ்வாறு திசை திருப்புவது என்பதில்தான் இங்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

"அரசியல் தீர்வு ஒன்றுக்கு இணங்கச் செய்யும் முகமாக விடுதலைப்புலிகளை நிராயுத பாணிகளாக்குவது தான் தற்போதைய யுத்தத்தின் நோக்கம்" என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதற்கு அரசியல் விளக்கம் கற்பிக்க முற்பட்ட கொழும்பின் அரசியல் விமர்சகர்கள் புலிகளை முற்றாக ஒழித்துக் கட்ட அரசு விரும்பவில்லை எனவும் அவர்களோடு பேச்சு நடத்தி அதனூடாக ஒரு தீர்வை எட்டவே அரசு விரும்புவதாகவும் தெரிவித்தனர் அத்துடன் இந்தியாவைப் பின்பற்றி அதே போன்றதொரு செயற்பாட்டை சிறிலங்கா மேற்கொள்ளாது என்பது தெளிவாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆனால் மறு புறத்தில் கடுமையான இராணுவ நெருக்குதல்கள், பொருளாதாரத்தடை, இந்தியாவுடனான போக்குவரத்தில் கஷ்டங்கள் போன்ற நிலைமைகள் புலிகளை நிர்ப்பந்திப்பதாகவும் அதனால் அவர்கள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரக்கூடும் எனவும் சில அரசியல் விற்பன்னர்கள் கருதுகின்றார்கள்.

இதேவேளை வடக்கும், கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்கள் என்பதையே ஏற்க மறுக்கும் தென்னிலங்கை அரசியல் வாதிகளும், புத்திஜீவிகளும் தேசிய இனப்பிரச்சினையை இராணுவ ரீதியில் அடக்கிவிட வேண்டும் என்பதிலேயே குறியாக உள்ளனர். இதற்காக ஒரு சில உதாரணங்களைக் குறிப்பிட்டுக்காட்டுவது இங்கு பொருத்தமானதாகும்.

தொண்டமானின் யோசனைகள் என்பது தமிழரிடம் நாட்டை அடகு வைப்பதற்கு எடுக்கப்படும் முன் முயற்சியே என்று முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியா முழக்கியுள்ளார். இதனை எதிர்ப்பதற்காக சிங்கள இனப் பாதுகாப்புப் பேரணி ஒன்றை உருவாக்கியுள்ள அவர் தமிழர்களுக்கு எந்தவிதமான சுயாட்சியும் வழங்கப்படக்கூடாது எனவும் அப்படி வழங்கப்பட்டால் சிங்கள இனம் அடிமையாக நேரிடும் எனவும் எச்சரித்துள்ளார். இன்னும் ஒரு புத்திஜீவியான குணதாச அமரசேகர என்பவர் லங்கா தீபபத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டம் என்பதுவே தமிழ் 'ஏகாதிபத்தியத்தின்' படையெடுப்பு என்று வர்ணித்துள்ளார், அதைவிடவும் சர்வகட்சி மாநாடு மற்றும் தெரிவுக்குழு என்று எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் சிங்கள மக்களுக்குத் துரோகம் செய்வதில் அனைவரையும் ஈடுபடுத்தும் முயற்சி என்பது அவர் கணிப்பு. இந்த குணதாச அமரசேகரா என்பவர் எண்பதுகளில் பிற்பகுதியில் பிரபலமடைந்த "ஜாதிக சிந்தனய" என்னும் சிங்கள இனவாதக் கோட்பாட்டின் பிதாமகர் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளரான நளின் டி. சில்வா இலங்கையில் எப்போதும் இரு இனங்கள் வாழ்ந்ததில்லை. இத்தீவு முழுவதும் பௌத்த சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமானது எனக் கூறுகிறார். தமிழருடை கலாசாரம் வந்தேறு கலாசாரம் Migrant Culture) எனக் கூறும் இவர் புலிகளை முறியடிக்க உதவுவதற்காக ஏனைய தமிழ்க் குழுக்களின் கோரிக்கைகளை ஏற்பது பொருத்தமற்றது அர்த்தம் இல்லாதது என்கின்றார்.

இவற்றின் மூலமாக தென்னிலங்கையில் பௌத்த பீடமும், இராணுவமும், அரச இயந்திரமும் மட்டுமன்றி புத்திஜீவிகளும் சிங்களத் தேசமும் தமிழ் மக்கள்மீது ஈவிரக்கமற்ற போர் ஒன்றைப் பிரகடனம் செய்துள்ளன. என்பது தெளிவாகிறது.

--இனியவன்--

அரசை எதிர்ப்பதாகக் கூறும் எதிர்க்கட்சிகள் கூட இலங்கைத் தீவின் 'தேசிய ஒருமைப்பாட்டை' காப்பதற்காகவோ அல்லது தமிழ் மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமென்பதற்காகவோ இந்தைய கருத்துக்களை மறுத்துரைக்கத்தானும் தயாராக இல்லை. இன்னும் சொல்லப் போனால் எதிர்க்கட்சிகள் இத்தகைய இனவாதக் கருத்துக்களை வெளிப்படையாக ஆதரித்தோ அல்லது மறைமுகமாக ஊக்குவித்தோதான் செயற்படுகின்றன.

இங்கு இன்னுமொரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டும். அதாவது கடந்த காலங்களில் தமிழர்களுக்கு உதவுவதாகவும், தமிழர்கள் பற்றிய அனுதாபம் கலந்த அக்கறை காட்டுவதாகவும் இந்தியாவைக் குற்றம் சாட்டி வந்த தென்னிலங்கையின் பௌத்த சிங்கள மேலாண்மைவாதிகள் ஆரிய பின்னணியிலான வட இந்தியர்களுக்கும், ஆரிய பாரம்பரியத்தைச் சேர்ந்த சிங்களவர்களுக்கும் திராவிடமும், தமிழரும் பொது எதிரிகள் என்று புதிய நட்புக் கரங்களை நீட்டுகின்றார்கள். பிரேமதாசா அரசைக் கவிழ்க்க முயலும் சக்திகள் 'அன்பு வழி'யில இந்தியாவின் 'நேசக்கரத்தைப்' பற்றிக் கொள்ள அவாவுடையவர்களாகவே தென்படுகின்றனர். அதன் மூலம் இந்திய அரசின் உதவி ஒத்துழைப்புடன் அரசும், படைகளும் தமிழ்த் தேசியவாதக் குரலை முற்றாக நசித்துவிட வேண்டும் என்பதுவே இத்தகைய சக்திகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவை அனைத்தையும் ஒருங்குசேரத்தொகுத்துநோக்கும் எவரும் சர்வகட்சிமாநாடோ அல்லது பாராளுமன்றத் தெரிவுக்குழுவோ தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும். எனினும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் பொழுது போக்கு அரசியல் பேச்சுக்களுக்கு களம் அமைக்கவும், அரசும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடுவதாக பாசாங்கு பண்ணவும் தெரிவுக்குழு மீண்டும் கூடலாம்.

அதாவது சுருக்கமாக எடுத்துக் கூறுவதானால் இத்தனை நீண்ட நெடிய கடுமையான போராட்டத்தின் பின்னரும் கூட தென்னிலங்கையின் ஆளும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகள் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ தயாராக இல்லை என்பது தெளிவானதாகிறது. ஆகவே தமிழ்மக்கள் தொடர்ந்தும் உறுதியான முறையில் இராணுவ ரீதியாக சிங்கள அரசைத் தோற்கடிக்க திடசங்கற்பம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

சர்வதேச அமைப்பு

## இந்தியாவின் திட்டங்களை பார்வையிட முடியாது

(றியோடிஜெனீரோய்)

சுற்றுச் சூழல் அல்லது மற்றத் துறைகளில் இந்தியாவின் திட்டங்களை பரிசீலனை செய்வதற்கு எந்தவொரு சர்வதேச அமைப்பிற்கும் அனுமதியில்லை என இந்திய சுற்றுச்சூழல் அமைச்சர் கமல் நாத் தெரிவித்துள்ளார்.

றியோடி ஜெனேரோவில் செய்தியாளர் மகாநாட்டில் பேசிய கமல்நாத் வளர்ந்த நாடுகள் தமது எந்தவொரு திட்டத்தையும் சர்வதேச பரிசீல

அமெரிக்காவினால் தெரிவிக்கப்பட்ட வனவளகோட்பாட்டிற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். வனங்கள் என்பவை கால்நடைத் தீவனம் மற்றும் எரிபொருளை அளிக்கும் சமூக வளம் என்பதால் இந்தியா அவற்றை உலக வளமாக கருதமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக அமெரிக்கா புவியில் உள்ள அனைத்து வனவளங்களையும் உலக

## செக். தேர்தல் முடிவுகள்; நாடு இரண்டாகப்பிரியும் நிலை

[பிராக்]

செக்கோஸ்லோவாகியாவின் தேர்தல் முடிவுகள் நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு செக். குடியரசில் சிவிக் ஜனநாயகக் கட்சியும், கிழக்கு செக். குடியரசில் ஜனநாயக ஸ்லோ இயக்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேர்தல்முடிவு

கொண்டு சேர்த்திருக்கிறது. மேற்கு செக்கில் ஆதரவு பெற்று வெற்றி ஈட்டிய கிளாஸ் சமஷ்டி பாராளுமன்றத்தில் பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளவர். ஆனால் புதிய அரசாங்கமொன்றை அமைப்பது அவருக்குக் கடினமான செயலாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஸ்லோவாக்கிய

இயக்கத்துடன் நடத்தவிருக்கும் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தால் செக்கோஸ்லோவாகியா உடைந்து விடும் எனவும் கிளாஸ் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் செக்கோஸ்லோவாகியாவில் ஐக்கியத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி வக்லாவ் ஹாவெல் புதிய அரசாங்கமொன்றை அமைக்க வலதுசாரியான கிளாஸைத்

திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனவே ஒழிய ஒரு பொழுதும் தமிழ் மக்களை இலங்கையின் பிரஜைகள், அவர்களுக்கும் இலங்கைத்தீவில் சிங்களவர்களுக்கிருப்பது போன்று சம உரிமைகள் உண்டு என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு தமிழனின் உதவி தேவைப்படாத காலகட்டத்தில், தமிழருக்கெதிரான நடவடிக்கைகளை மேற் கொள்வதிலேயே அக்கறையாக இருந்தனர். இதில் கட்சி வேறுபாடு இன்றியும் செயற்பட்டனர்.

மலையகத் தமிழ் மக்களின்பால் சிங்கள அரயசிற் கட்சிகளை சார்ந்து நிற்கச் செய்து விடும் என்பதற்காக 1949 இல் அவர்களின் வாக்குரிமையை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்கள் பறித்தனர். இதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் பலம் வெகுவாகக் குறைக்கப்பட்டது.

பின்னர் 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்துடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தது. இதனால் அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றக் கூடிய பலத்துடன் இக்கட்சி இருந்தது. இந்நிலையில் முதல் வேலையாக 1972 இல் அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றியமைத்தது. இம் மாற்றத்தின் மூலம். முன்னர் சிறுபான்மை இனங்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்த பாதுகாப்பு இல்லாது போயிற்று.

அடுத்ததாக 1977 ல் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கியதேசியகட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்குவந்த கையுடனேயே ''போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்'' என ஜே ஆர். ஜெயவர்த்தனா தமிழ் மக்களைப் பார்த்துப் போர பிரகடனம் செய்தார். அதன் பின்னர் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட ஆறாவது திருத்தச்சட்டம் மூலம் தமிழ் எம். பிக்கள் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற வேண்டி வந்தது.

ஆனால் இவ்வாறெல்லாம் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட சிங்கள பேரினவாதக்கட்சிகள் தேர்தல்களின் போதும், பலவீனமான நிலையில் ஆட்சி அமைக்கும் போதும் சிறுபான்மையினரை அணைத்துக் கொண்டன. சிங்கள அரசியற்கட்சிகள் நெருக்கடிகள் ஏற்பட்ட போதெல்லாம் தமிழருடன் ஒப்பந்தங்களும் செய்து கொள்ள முன்வந்தன. ஆனால் இவையாவும் தமது ஆட்சியை நீடிப்பதற்கான ஒரு யுக்தியாக கையாளப்பட்டனவே ஒழிய தமிழர் பிரச்சினையைத் தீர்பதற்கோ அன்றி தமிழரின் உரிமைகளை அங்கீகரித்து அவர்களுக்கும் சம அந்தஸ்து வழங்குவதற்காகவோ ஏற்பட்டவையல்ல.

ஆனால் காலம் காலமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டே வந்தார்கள். தேவை ஏற்பட்ட போது அணைத்துக் கொண்ட சிங்களக்கட்சிகள் தேவை முடிந்ததும் உதறித்தள்ளின. ஆனால், தமது அபிலாசைகளை நிறைவேற்றுவதில் மட்டுமே கவனமாகவும் அக்கறையாகவும் இருந்த தமிழ் தலைவர்கள் இது குறித்து அக்கறை கொண்டிருக்கவில்லை. சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்து தமிழ் தலைவர்களும் தமிழ் மக்களை ஏமாற்றினர். தேர்தலில்வாக்கு வேட்டைக்காக மட்டும் சிங்கள தலைவர்களைத் திட்டினார்கள். அரசியல் விடுதலை பற்றியும் பேசினார்கள். தேர்தல்களில் வெற்றியும் பெற்றார்கள்.

ஆனால், இன்று தமிழ் மக்கள் அவ்வாறாக ஒரு ஏமாறும் நிலையில் இல்லை. சிங்கள தமிழ் கட்சிகள் முன்வைக்கும் தேர்தல் வாக்குறுதி எதையும் நம்பத் தயாராகவும் இல்லை; இன்று தமிழ் மக்கள் கோருவது சுய கௌரத்துடன் கூடிய பாதுகாப்பு. அது வழங்கப்பட்ட பின்னரே தேர்தல் பற்றி அவர்களினால் சிந்திக்க முடியும், அதைவிடுத்து, அடுத்துவரும் தேர்தலில் தமிழரின் வாக்குகள் பற்றிச் சிந்திப்பது மடத்தனமானது. இதை அனுரா உட்பட சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.

---

தல்கள், பொருளாதாரதை. தின் படையெடுப்பு என்று என்பது தெளிவாகிறது. முற்றாக நசித்துவிட வேண் றது.

---

சர்வதேச அமைப்பு

## இந்தியாவின் திட்டங்களை பார்வையிட முடியாது

(றியோடிஜெனீரோய்)

சுற்றுச் சூழல் அல்லது மற்றத் துறைகளில் இந்தியாவின் திட்டங்களை பரிசீலனை செய்வதற்கு எந்தவொரு சர்வதேச அமைப்பிற்கும் அனுமதியில்லை என இந்திய சுற்றுச்சூழல் அமைச்சர் கமல் நாத் தெரிவித்துள்ளார்.

றியோடி ஜெனேரோவில் செய்தியாளர் மத்தியில்பேசிய கமல்நாத் வளர்ந்த நாடுகள் தமது எந்தவொரு திட்டத்தையும் சர்வதேச பரிசீலனைக்கு அனுமதிக்காதபோது வளரும் நாடுகள் மட்டும் அவ்வாறு செய்வதற்கு காரணமெதுவும் இல்லை என்று கூறினார்.

அமெரிக்காவினால் தெரிவிக்கப்பட்ட வனவளகோட்பாட்டிற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். வனங்கள் என்பவை கால்நடைத் தீவனம் மற்றும் எரிபொருளை அளிக்கும் சமூக வளம் என்பதால் இந்தியா அவற்றை உலக வளமாக கருதமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக அமெரிக்கா புவியில் உள்ள அனைத்து வனவளங்களையும் உலக வளமாக கருத வேண்டுமென்றும் இதற்கு உலக நாடுகள் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டுமென்றும் கேட்டிருந்தது.

## வறிய நாடு வரிசையிலிருந்து இந்தோனேஷியா விலகல்

(பாண்டுங்)

இந்தோனேஷியா உலகின் வறிய நாடுகளில் இருந்து விலகிச் செல்வதற்கு தயாராகி உள்ளது. இந்த சகாப்தத்தின் முடிவில் இந்தோனேஷியாவின் வருமானம் ஏறக்குறைய இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று உலக வங்கி அறிவித்துள்ளது

எனினும் இந்தோனேஷியா அதிகரித்து வரும் வெளிநாட்டுக் கடன் பிரச்சினையை சமாளிக்க வேண்டியுள்ளதாக உலக வங்கி தனது இரகசிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தோனேஷியா தனது பொருளாதார திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமானால் வெளிநாடுகளில் இருந்து நன்கொடை வழங்குபவர்கள் பெரியளவில் தொடர்ந்து உதவி அளிக்கவேண்டுமெனவும் இந்தோனேஷியாவுக்கு உதவி வழங்குவோர்க்கான மாநாடு அடுத்த மாதம் பாரிஸில் நடைபெறுவதற்கு முன்பாக இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## தெற்காசியர்குடியேறுவதை சிங்கப்பூர் விரும்புகிறது

(சிங்கப்பூர்)

தொழிலாளர் பற்றாக் குறையை எதிர்நோக்கியிருக்கும் சிங்கப்பூர் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்று குடியேறுவதை விரும்புவதாக சிங்கப்பூர் பிரதிப் பிரதமர் லீ ஸியற றூங் கூறியுள்ளார்.

உள்ளூரில் சீக்கிய கலாசார மாநாடொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் ஹொங் ஹொங்கிலிருந்து தொடர்ச்சியாக குடியேற்றவாசிகள் வருவதைப்போல ஆற்றல் மிகும் தெற்காசியர்களும் சிங்கப்பூருக்கு தொடர்ச்சியாக வந்து குடியேறுவதை விரும்புவதாகவும், தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த தொழில்சார் உத்தியோகத்தர்கள் அதிகளவில் தேவைப்படுவதாகவும் தெரிவித்தார்.

## அமைச்சர் சிதம்பரம் செல்லவிருந்த இந்திய விமானத்தில் வெடிகுண்டுப் புரளி

(சென்னை)

இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பயணம் செய்யவிருந்த விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து பலமணி நேரம் தாமதித்து செல்லவேண்டி ஏற்பட்டது.

நேற்று முன்தினம் சென்னையிலிருந்து பம்பாய் நோக்கி 135 பிரயாணிகளுடன் புறப்பட இருந்த இவ் விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக தகவல் கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இவ் விமானத்தில் பயணம் செய்ய இருந்த இந்திய மத்திய அமைச்சர் ப சிதம்பரம் முன்னதாக வேறோர் விமானத்தில் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## செக். தேர்தல் முடிவுகள்; நாடு இரண்டாகப்பிரியும் நிலை

[பிராக்]

செக்கோஸ்லோவாகியாவின் தேர்தல் முடிவுகள் நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு செக். குடியரசில் சிவிக் ஜனநாயகக் கட்சியும், கிழக்கு செக். குடியரசில் ஜனநாயக ஸ்லோ இயக்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேர்தல்முடிவுகள் பாராளுமன்றத்தை ஒரு முட்டுக்கட்டையான நிலைக்கு கொண்டு சேர்த்திருக்கிறது. மேற்கு செக்கில் ஆதரவு பெற்று வெற்றி ஈட்டிய கிளாஸ் சமஷ்டி பாராளுமன்றத்தில் பெரும்பாலான ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளவர். ஆனால் புதிய அரசாங்கமொன்றை அமைப்பது அவருக்குக் கடினமான செயலாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் ஸ்லோவாக்கிய இயக்கத்துடன் நடத்தவிருக்கும் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தால் செக்கோஸ்லோவாகியா உடைந்து விடும் எனவும் கிளாஸ் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் செக்கோஸ்லோவாகியாவில் ஐக்கியத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி வக்லாவ் ஹாவெல் புதிய அரசாங்கமொன்றை அமைக்க வலதுசாரியான கிளாஸைத் தெரிவு செய்துள்ளார்.

## மன்மோகன்சிங்கை பதவி விலககோரிக்கை

(பம்பாய்)

இந்திய நிதியமைச்சர் மன்மோகன் சிங்கை பதவி விலகுமாறு பாரதிய ஜனதா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவின் மிகப் பெரும் பங்குச் சந்தை மோசடி கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டது. தார்மீக அடிப்படையில் மன்மோகன் சிங் பதவி விலகவேண்டுமெனவும் பாரதிய ஜனதா கட்சி கேட்டுள்ளது.

இந்நியாவின்

## ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு

(டில்லி)

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பை இந்திய ஜன திபதி ஆர். வெங்கட்ராமன் நேற்று வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி வெங்கட்ராமனின் அறிவிப்பைத் தொடர்ந்து வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியது. வேட்பு மனுவை தாக்கல் செய்யும் இறுதி நாள் இம் மாதம் 24ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களும் 25 மாநிலங்களைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர்களும் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் வெங்கட்ராமன் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தேர்த்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 13ஆம் திகதி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம். இப்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் அடுத்தமாதம் 24ஆம் திகதியுடன் முடிவடைகிறது என்றும், அதனால் புதிய ஜனாதிபதி அடுத்த மாதம் 25ஆம் திகதி பதவியேற்கும் வகையில் தேர்தல் பணிகளை முடிக்க வேண்டுமென்று தேர்தல்ஆணைக்குழுவை 1952ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் சட்டம் கேட்டுக்கொள்கிறது.

## பொது வேலை நிறுத்தம்

இந்திய மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்து அடுத்த வாரம் பொது வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தேசிய அளவில் இந்தப் பொது வேலை நிறுத்தத்தை நடாத்தப் போவதாக ஏழு இடதுசாரித் தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன

## பாராளுமன்றமாநிலங்கள் அவைக்கு அ.தி.மு.க-காங்கிரஸ்சார்பில் ஆறு பேர் போட்டியிடுவர்

இந்தியப் பாரளுமன்றத்தின் மாநிலங்கள் அவைக்கு தமிழக சட்டப் பேரவைஉறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய ஆறு இடங்களுக்கு அ.தி.மு.க.வின்சார்பில் ஐந்து பேரும் இந்திரா காங்கிரஸின் சார்பில் ஒருவரும் போட்டியிடுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் தலைவர் பி வி. நரசிம்மராவ் அ.தி.மு க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்

காங்கிரஸ் கட்சிக்கு தமது கட்சி உறுதுணையாக இருக்குமென ஜெயலலிதா நரசிம்மராவுக்கு உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாநிலங்கள் அவையில் இப்போது உறுப்பினர்களாக உள்ள அ.தி.மு க வைச் சேர்ந்த ஜி. சுவாமிநாதன். நாஞ்சில் வின்சன்ட், ஆர் ஜி கோபாலன் காங்கிரசைச் சேர்ந்த என். பழனியாண்டி, திருமதி ஜெயந்தி நடராஜன், தி மு.க.வின் டி.ஆர். பாலு ஆகியோரின் பதவிக்காலம் இம்மாதம் முடிவடைகிறது. இதனைத் தொடர்ந்து மாநிலங்கள் அவை இந்த இடங்களுக்கு இம் மாதம் 25ஆம் திகதிக்குள் ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கவேண்டும்.

ஈழநாதம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# பகிரங்க விசாரணைக்கு தி.மு.க.பொதுக்குழுகோரிக்கை

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கை முழு உலகமுமே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது இந் நிலையில் அவ் வழக்கை இரகசியமாக நடாத்தினால், அது குறித்த ஊகங்கள் அனுமானங்கள் வதந்திகள் பரவுவதை தடுக்க முடியாது தவறான வழிநடத்தல்களுக்கு இடம் தராமல ராஜீவ் கொலை வழக்கை பகிரங்கமாக நடத்த வேண்டும்.

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழு தீர்மானம் ஒன்றின் மூலமாக கடந்தவாரம கோரிக்கைவிடுத்திருக்கிறது.

இப் பொதுக்குழுவின் தீர்மானத்தில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டிருப்பது குறித்து குற்றஞ் சாட்டப்பட்டிருப்போர் மீது நடாத்தப்படும் கிரிமினல் வழக்கை இரகசியமாக நடாத்துவது விரும்பத்தக்கது அல்ல

சென்னடி கொலை வழக்கு குறித்து ''வாரன்'' ஆணைக் குழு அறிக்கைக்குப் பிறகும் ஊகங்கள் உலாவருவதனை தடுத்து நிறுத்தமுடியவில்லை.

ராஜீவ் கொலை வழக்கின் இரகசிய விசாரணை நமது நீதித் துறையின் சுதந்திரத்தைப் பற்றியும் சட்டத்தின் ஆட்சி பற்றியும் மிகத்தவறான கருத்தினை சர்வதேச அரங்கில் ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளது

இப் பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட தி.மு.க. கருணாநிதி பத்திரிகையாளர்களுக்களித்த பேட்டியொன்றில் விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்ற போர்வையில் இலங்கை இராணுவத்தால் அப்பாவி இலங்கை தமிழ் பொது மக்கள் கொல்லப்படுவதனை மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

## 15 ஆம் திகதி வர்மா கமிசன் அறிக்கை சமர்ப்பிக்கும்

(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுண்டபோது பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடுகள் இருந்தனவா என்பதைக் கண்டறிவதற்கு ஏற்படுத்தப்பட்ட வர்மா விசாரணைக்குழு தனது அறிக்கையை உள்துறை அமைச்சர் எஸ் பி சவானிடம் இம் மாதம் 15 ஆம் திகதி கையளிக்கும்.

இந்த அறிக்கை ஏறக்குறைய தயாராகி விட்டதென்றும் இது இரண்டு தொகுதிகளைக் கொண்டதாக அமையும் என்றும் விசாரணைக் குழுவின் செயலாளர் தெரிவித்தார். சென்ற மாதம் நான்காம் திகதி விசாரணைக்குழு அதன் விசாரணையை முடித்துக் கொண்டது.

## இந்தியாவுடன் போர் நடைபெற மாட்டாது

- நவாப் ஷெரீப்

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நெருக்கடி நிலவும் போதும் இந்தியாவுடன் யுத்தமொன்று நடக்காது என்று பாகிஸ்தானிய பிரதமர் நவாப் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

கராச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் அதனைத் தெரிவித்தார்

இதேநேரம் நவாப் ஷெரீப்பும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் இவ்வாரம் பிரேசிலில் சந்தித்து இந்த நெருக்கடி குறித்துப் பேசுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பேச்சு மூலம் தீர்வு காண்க; அமானுல்லாகான் அழைப்பு

[சிறிநகர்]

காஷ்மீரில், இந்தியாவிற்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தி வரும் காஷ்மீர் தீவிரவாதத் தலைவர் சமாதானப் பேச்சு வார்த்தைமூலம் நெருக்கடிக்குத் தீர்வு காண முன்வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவரான அமானுல்லாக்கானே இந்த அழைப்பை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

## அகதிகள் அனுப்பாமைக்கு காலநிலை காரணமாம்

[சென்னை]

இலங்கையில் தற்போது நிலவும் மோசமான காலநிலை ... மறுவாழ்வுக்கான இணைப் பாணையாளர் சி. எம். ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

குடும்பப் ... 18.) எஸ். மாலட்சுமி(வயது 34) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இவர்கள் அனைவரும் சங்கானை அரசினர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்பு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் ...

### கிராம அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்தில் கிராம அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் பாரியவனம் மிக்கவர்கள் பலர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர் மேற்படி கருத்தரங்கில் பிரிவு செயலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உதவிக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாவட்ட பிரதி ஆணையாளர் திரு து வைத்திலிங்கம் கேட்டுள்ளார். [ச]

கைலாசபதி அரங்கில்

## விபுலானந்த அடிகள் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை (12-6-1992) பி ப. 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவினை யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றமும் மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்தவுள்ளது

தமிழ் மன்றத் தலைவர் கி. விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் நல்லை ஆதீன ஸ்ரீ ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமியும், புனித சம்பத்தரிசியார் கல்லூரி அதிபர் அருள் திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளாரும் ஆசியுரை நிகழ்த்தவுள்ளனர்.

தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர் அ சண்முகதாஸ் 'விபுலானந்த அடிகளும் தமிழும்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். இதனைத் தொடர்ந்து 'உள்ளக் கமலம்' எனும் நாட்டிய நாடகம் நடைபெறும்.(05)

பாராளுமன்ற தெரிவுக் குழுவில்

## அரசாங்கக் கட்சியினர் தொடர்ந்து பங்குபற்றுவர்

(கொழும்பு)

எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது பகிஷ்கரிப்பைக் கைவிட்டாலும் சரி கைவிடாவிட்டாலும் சரி இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டத்தில் தொடர்ந்து பங்கு பற்றுவது என்று அரசாங்க எம். பிக்கள் முடிவு செய்துள்ளனர் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

அத்துடன் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்கா பதவி துறந்தால் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரச்சினை தீர்விற்குமுன் புலிகள் ஒடுக்கப்படுவார்கள்

### ஜோன்அமரதுங்கா

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படுவதற்கு முன்பாக விடுதலைப் புலிகள் முழுமையாக ஒடுக்கப்படுவார்கள் ... ளார்.

அகில இந்திய வானொலி இத்தகவலை ஒலிபரப்பிய ...

# பேரழிவுகளின் மத்தியிலும் கல்வி ஆர்வம் குன்றவில்லை

- துணைவேந்தர் துரைராசா

[கொழும்பு]

யாழ் குடாநாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையில் பல்வேறு விதங்களில் பேரழிவுகள் தொடர்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் தான் யாழ் மாணவர்கள் கல்வியைக் கற்க வேண்டியுள்ளது. கல்வியைக் கற்க முடியாத நிலையில் நமது இளம் சந்ததியினரின் எதிர்காலம் இருண்டு போவதை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ.துரைராசா கூறினார்.

ஹாட்லிக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் நடைபெற்றது கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய பேராசிரியர் துரைராசா மேலும் கூறியதாவது —


ஒரு சராசரியாழ்ப்பாணத்து மனிதனின் வாழ்வில் கல்வி வகிக்கும் பங்கு மிக மகத்தானதாகும். அதனை இழந்து அவனால் நிமிர்ந்து நிற்க முடியாது.

இன்று யாழ் மாணவர்கள் கல்வி கற்க வேண்டிய பாடசாலைகள் இடிபாடுகளாகி விட்டன. இருந்தும் யாழ். மாணவர்கள் கல்வியில் காட்டி வரும் ஆர்வம் பிரமிக்கத்தக்கது.

கல்வி கற்கக்கூடிய மனநிலை மற்றும் சூழலும் இல்லாத போதிலும் கூட அவர்கள் மிகச்சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில் நிற்கிறார்கள்.

வைபவத்தில் முன்னாள் ஹாட்லிக் கல்லூரி அதிபர் கே பூர்ணம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

## சிங்களப்படை சிதறிட செங்களமாடிய மாவீரர்



மேஜர் வெற்றிச்செல்வன்



லெப். மலையமான்



லெப். அறிவுநம்பி



லெப். தர்மராஜ்

திருக்கோணமலை மாவட்ட மூதூர் பகுதியில் மகிந்தபுர இராணுவ முகாமிலிருந்து வெளியேறி ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினரை விடு...

இது இரண்டு தொகுதிகளைக் கொண்டதாக அமையும் என்

னுக்கும் இடையில் நெருக்கடி நிலவும் போதும் இந்தியாவு

டன் யுத்தமொன்று நடக்காது என்று பாகிஸ்தானிய பிரதமர் நவாப் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

கராச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் அதனைத் தெரிவித்தார்

இதேநேரம் நவாப் ஷெரீப்பும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் இவ்வாரம் பிரேசிலில் சந்தித்து இந்த நெருக்கடி குறித்துப் பேசுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பேச்சு மூலம் தீர்வு காண்க; அமானுல்லாகான் அழைப்பு

[சிறிநகர்]

காஷ்மீரில், இந்தியாவிற்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தி வரும் காஷ்மீர் தீவிரவாதத் தலைவர் சமாதானப் பேச்சு வார்த்தைமூலம் நெருக்கடிக்குத் தீர்வு காண முன்வரு மாறு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவரான அமானுல்லாக்கானே இந்த அழைப்பை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது

# அகதிகள் அனுப்பாமைக்கு காலநிலை காரணமாம்

[சென்னை]

இலங்கையில் தற்போது நிலவும் மோசமான காலநிலை காரணமாகத் தமிழகத்திலிருந்து அகதிகளைத் திருப்பி அனுப்புவது நிறுத்தப்பட்டுள்ளது என்று தமிழக அகதிகள் மறுவாழ்வுக்கான இணைப் பாணையாளர் சி. எம். ராம்தாஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் காலநிலை சீரானதும் விமானம் மூலம் அவர்கள் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

சிங்கப்பூரில்

# 18 வயதிற்கு உட்பட்டோர் சிகரெட் பிடிக்கத் தடை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் அரசு 18 வயதுக்குக் குறைந்தோர் சிகரெட் புகைப் பிடிப்பதைத் தடை செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளது. புகைப் பிடிக்கும் இளைஞரின்தொகை அதிகரித்துவருவதை தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அடுத்த பாராளுமன்ற அமர்வில் இதற்கான சட்டம் கொண்டுவரப்படும். இப்படியான ஒரு சட்டத்தைக் கொண்டுவரும் முதல் ஆசிய நாடு சிங்கப்பூராகும். சிங்கப்பூர் புகையிலை உற்பத்தியாளர் மற்றும் இறக்குமதியாளர் சங்கம் இத்தடையை வரவேற்றுள்ளது.

சிங்கப்பூர் அரசு சிகரெட் விளம்பரங்களுக்கும், பொது இடங்களில் புகைப்பிடிப்பதற்கும் ஏற்கனவே தடை விதித்துள்ளது. அமெரிக்காவில் சில மாநிலங்களில் இளைஞர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

# வாகன வரிசை இலக்கம் 10. 06. 1992

சோதனை சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம் — 4292

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்றஇறுதி வாகன இலக்கம் — 3350

இராணுவம் அனுமதித்த இறுதி வாகனவரிசை இலக்கம் — 3328

வட பகுதிக்கு வெளியே சென்றவாகன விபரம்:

28-6546, 24-5877, 28-3004, 26-923 26-6628 27 9030, 27-3727, 26 7663, 41-9478, 40-7541, 24-4691, 27-2010. 26-561, 36-4230, 36-2482, 37-1302, 25-5741, 25-6473, 37-2035, 25-545, 70-2378. 70-9119

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன விபரம்:

24-6448, 26-2493 24-9897, 26-6 26, 42 1182, 27 4301, 27 7822, 24-5377 24-5416, 28-6640, 42-1019 42-3267, 24-5437, 28-4183, 26 2421 26-5505, 28-1262, 27-2761, 26-7039 28-2145, 27-3803, 28-3476, 26-3530.

I C R.C — 23

★ தனியார் வாகன உரிமையாளர்களின் நன்மை கருதி வாகனவரிசை விபரம் எமது பத்திரிகையில் தொடர்ந்தும் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பப்

18., எஸ். மாலட்சுமி(வயது 34) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த இவர்கள் அனைவரும் சங்கானை அரசினர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்பு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்

இத் தாக்குதல்களின் போது இரண்டு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

அடுத்து கல்வளைப்பிள்ளையார் கோவில் அருகில் வீசிய குண்டு ஒன்று வீழ்ந்து வெடித்ததில் மேற்படி ஆலய மதில் பலத்த சேதமடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை-பொன்னாலைப் பகுதியில் ஒர் குண்டு வீசப்பட்டது. இக்குண்டு வீழ்ந்து வெடித்த போதிலும்ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை

தெல்லிப்பழையில்

உடல் இடிபாடுகளுக்குள்ளிருந்து சிதறிய நிலையில பலமணி நேரத்தின் பின்னரே பொது மக்களால்கண்டுமீட்கப்பட்டது

இவர்களது சடலங்கள் அனைத்தும் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல்களினால் துர்க்கை அம்மன் ஆலய மகளிர் இல்லம் சேதமடைந்துள்ளது. கடந்தவார விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து அங்கு தங்கியிருந்த 80 பிள்ளைகளும் பாதுகாப்பான இடங்களுகு மாற்றப்பட்டதனால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியிலிருந்த மூன்று கடைகள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் பத்திற்கு மேற்பட்ட தென்னைமரங்கள் முறிந்து வீதிகளின் குறுக்கே வீழ்ந்து கிடக்கின்றன.

குடிமனைகள்

கள், பெண்கள் உட்பட 7பேர் கொல்லப்பட்டு, 11 பேர் படுகாயமடைந்தனர் பெருமளவு உடைமைகளும் சேதமாயின.

கல்வளைப் பிள்ளையார் கோயிலடியில் இடம்பெற்ற தாக்குதலினால் கோவில் மதில் சேதமடைந்தது.

# தொடர்ந்து பங்குபற்றுவர்

(கொழும்பு)

எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது பகிஷ்கரிப்பைக் கை விட்டாலும் சரி கைவிடா விட்டாலும் சரி இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டத்தில் தொடர்ந்து பங்கு பற்றுவது என்று அரசகட்சி எம். பிக்கள் முடிவு செய்துள்ளனர் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன

அத்துடன் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்கா பதவி துறந்தால் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரச்சினை தீர்விற்குமுன் புலிகள் ஒடுக்கப்படுவார்கள் ஜோன்அமரதுங்கா

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படுவதற்கு முன்பாக விடுதலைப் புலிகள் முழுமையாக ஒடுக்கப்படுவார்கள் என்று சிறிலங்காவின் வெளிவிவகார இணை அமைச்சர் ஜோன் அமரதுங்கா கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலி இத்தகவலை ஒலிபரப்பிய போதும் அவர் எங்கே எப்போது இதனை கூறினார் என்பதை அது குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது

## ஒய்வூதியம் இல்லை

தீவகப் பகுதியிலுள்ள ஒய்வூதியக்காரர்களுக்குப் பல மாதங்களாக ஒய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை பல அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பளமும் வழங்கப்படவில்லை.

மன்னாரில்

மடைந்ததும் தெரிந்ததே.

இதே சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப் அரவிந்தன் என்னும் பெயரில் வெளியான புகைப்படம் தவறானதாகும். வீரச்சாவு அடைந்த லெப். அரவிந்தனின் புகைபபடம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

மாகியப்பிட்டி

இவர்களைவிட கா. கனகம்மா (வயது 55) சி. வசந்தா (வயது 14), சாந்தகுமார் (வயது 9), சுதர்சன் (வயது 1) ஜெனனி (வயது 4) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இப்பகுதியில் இருந்த மூன்று வீடுகள், ஒரு கடை ஆகியவை பலத்த சேதமடைந்துள்ளன.

சூழலை

ஏற்படும்.

ரி வி. யின் அறிமுகத்துடன் உலகம் சுருங்கியுள்ளது ரி. வி. யிலும் மற்றும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களிலும் விளம்பரப்படுத்தப்படும் பொருள்களை நாம் அசல் என்று எடுத்துக் கொள்கிறோம். மேற்கில் இருந்து கிடைக்கும் பொருள்களை நாம் அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். இப் பொருள்களில் பல எமது சூழலை மாசு படுத்துகிறது என்பதை நம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஐரோப்பிய

மது முற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி கிறிஸ்ரீன் ஒக் தலைமையில் நான்கு பேர் அடங்கிய ஐரோப்பியப் பாராளுமன்றத் தூதுக்குழு சிறிலங்காவின் மத்தி, தென் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது 60,000 பேர் வரையில் தென்பகுதியில் கொலைசெய்யப்பட்டது பற்றி தூதுக்குழு அதன் அறிக்கையில கண்டனம் தெரிவித்திருந்தது.

தூதுக்குழு கொழும்பில் பாதுகாப்புப் படை அதிகாரிகள், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், அமைச்சர்கள், அரச அதிகாரிகள் ஆகியோரைச் சந்திக்க உள்ளது.

இதேவேளை, கடந்தமாதம் சிறிலங்காவுக்கு விஜயம் செய்திருந்த நோர்வே வெளியுறவு அமைச்சு மனித உரிமைகள் குழு அதன் அறிக்கையைவிரைவில் வெளியிடவுள்ளது.

மீண்டும்

ணம வருகை தந்திருந்தகாலத்தில் உங்கள் ஸ்தாபனப் பிரதிநிதியைச் சந்திக்க வாய்ப்பளித்தமையையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

உங்களின் விரிவான நிருபத்தை அதற்குத் தொடர்பான அமைச்சுக்கும், சனாதிபதி அவர்களுக்கும் ஏனைய நிருபங்களுடன்சேர்த்து அனுப்புவதற்கான ஒழுங்கினை நம் செய்கிறோம் இவற்றுக்குரிய அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நிருபத்தில் அடங்கியுள்ளவை பற்றி ஏற்கெனவே நாம் உரையாடியுள்ளோம். மேலும் அவற்றுக்கான அமைச்சர்களையும், கௌரவ சனாதிபதி அவர்களையும் சந்திப்பதற்குக் காத்துக்கொண்டிருக்கிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



லெப். அறிவுநம்பி



லெப். தர்மராஜ்

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில மகிந்தபுர இராணுவ முகாமிலிருந்து வெளியேறி ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமடக்கித் தாக்குதல நடத்தினர். இச் சமரின்போது 13 இராணுவத்தினர் கொல்லப் பட்டதுடன் பல ஆயுதங்களும விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே. இதன்போது வீரச் சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கைகள்



2 ஆம் லெப் முனிமொழி (ரங்கன)



2 ஆம் லெப். மறைமலை (விவேகன்)



வீரவேங்கை காளிதாஸ் (திருவருட்செல்வன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது